(இ) வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியம் உறுப்பினர் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கான தேர்தலுக்கு (Board of Management of Tamil Nadu Agricultural University) திரு. மா. சின்னராசு அவர்களின் பெயர் முறையாக நியமனம் செய்யப் பெற்றுள்ளது. முறைப்படி நியமனம் செய்யப்பட வேண்டிய வேட்பாளரின் எண்ணிக்கையும், நிரப்பப்பட வேண்டிய வெற்றிடத்தின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால், திரு. மா. சின்னராசு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளார் என நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

மீஞ்சூர் காவல் நிலையத்தில் கைதி மரணம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம், ப. நெடுமாறன், கே. ஆர். சுந்தரம், தி. கா. நல்லப்பன், என். வரதராஜன், ரா. கிருஷ்ணன், எஸ். என். இராமசாமி, சு. பாலன், சோ. அழகர்சாமி, இரா. கருப்பையா, எம். ஆறுமுகம், செ. சிவசாமி, என். ஏ. பூங்காவனம், ஏ.டி. கருப்பையா, ஜே. ஹேமச்சந்திரன், எம். செல்லமுத்து, டி. மணி, அ. ரகுமான்கான், ப. பொன்னுரங்கம் ஆகியோர் "சென்னைப் பக்கமுள்ள மீஞ்சூர் போலீஸ் நிலையத்தில் 18-2-1984 அன்று போலீஸ் லாக்கப்பில் இருந்த வள்ளூரைச் சேர்ந்த ஏழுமலை என்பவர் போலீசாரின் அடி தாங்காது லாக்கப்பில் இறந்துள்ளதும், இதனால் ஆத்திரம் அடைந்துள்ள மக்கள் தாக்குதல் காரணமாக ஒரு போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதும் இவற்றின் காரணமாக அப்பகுதியில் போலீசாரின் கெடுபிடி அதிகரித்துள்ளதால், மக்களிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள்

(முற்பகல் 10.20)

கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்களை மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.